திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

பிறப்பிப்பவர்:திரு.இராயுண்ணியகோட்டி, M.Sc., M.Ed., M.Phil.

ந.க.எண். 2750 / அ1/2024, நாள். ০৭ .12.2024

******

பொருள்: பள்ளிக்கல்வி – கருணை அடிப்படை பணிநியமனம் – திருப்பத்தூர் மாவட்டம், கொல்லக்குப்பம் அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 14.01.2015 அன்று பணிக்காலத்தில் காலமான - அரசு ஊழியர் திரு.கோ.சம்பத் என்பாரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.ச.சேரன், இளநிலை உதவியாளர், மாதனூர் வட்டாரக் கல்வி அலுவலகம் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 101, பள்ளிக்கல்வி (வரவு செலவுத் திட்டம் ) துறை நாள்.18.05.2018
2. அரசாணை(நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு(க்யூ.-1) த்துறை நாள். 02.03.2016
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள். 23.01.2020
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள். 26.02.2021
5. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.38194/ஜே/இ1/2023, நாள்:22.07.2024
6. பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின்( பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 39671/ஜே/இ4/2021, நாள். 17.09.2022.
7. திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல் முறைகள், ந.க.எண்.4043/ அ1/ 2022, நாள்.11.10.2022
8. அரசாணை எண்.151, பள்ளிக்கல்வித் துறை நாள். 09.09.2022
9. அரசாணை எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள். 08.03.2023
10. அரசுக் கடிதம் எண் 5532/G2/2023-1 மனித வள மேலாண்மைத் துறை நாள். 20.09.2023
11. அரசுக் கடிதம் (efile) எண். 4419 தொ.க 1(1)/2024-1 நாள். 17.05.2024
12. பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 026062/ஜே/இ2/2023, நாள். 22.05.2024
13. சம்மந்தப்பட்ட பணியாளரின் விண்ணப்ப நாள்.

******

திருப்பத்தூர் மாவட்டம், கொல்லக்குப்பம் அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து கடந்த 14.01.2015 அன்று பணிக்காலத்தில் காலமான திரு.கோ.சம்பத் என்பாரின் வாரிசுதாரரான மகன் திரு.ச.சேரன் என்பவருக்கு பார்வை (7) இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் 14.10.2022 முற்பகல் முதல் மாதனூர் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (4) இல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2 இல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1 இல் உள்ள ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 31.12.2019 க்கு பிறகு கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் பணிவரன்முறை குறித்து பார்வை (9) இல் குறிப்பிட்டுள்ள அரசாணை எண். 33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள். 08.03.2023, பார்வை (11) இல் காணும் அரசுக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுடன் பார்வை (12) இல் காணும் பள்ளிக்கல்வி இணைஇயக்குநரின் செயல்முறைகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு அவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பான உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள். 26.02.2021 இனம் 16-இன்படி தனியர்களின் பணியினை வரன்முறை செய்திட எவ்வித விதித்தளர்வும் தேவையில்லை எனில் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் பார்வை (10) இல் குறிப்பிட்டுள்ள அரசுக்கடிதத்தில் வெளியிடப்பட்ட தெளிவுரையின்படி விதித்தளர்வு தேவைப்படும் நேர்வுகளுக்கு மட்டும் அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அரசாணை மற்றும் செயல்முறைகளில் வழங்கப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றி திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வரும் திரு.ச.சேரன் என்பவரின் பணிவரன்முறை குறித்த கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டது.

தனியருக்கு வயது தளர்வு, கல்வித்தகுதி தளர்வு மற்றும் எவ்வித விதித்தளர்வுகளும் தேவைப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பார்வை 11 இல் குறிப்பிட்டுள்ள அரசுக் கடிதத்தில் இனம் 16-இன்படி நியமன அலுவலர்களே விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசாணைகள் மற்றும் செயல்முறைகளில் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி இளநிலை உதவியாளர் பதவிக்குரிய நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றிவரும் திரு.ச.சேரன் என்பவருக்கு கீழ்க்கண்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர்/பதவி/மற்றும் தற்போது பணிபுரியும் பள்ளி/அலுவலகம் திருவாளர்கள் | இறந்த அரசு ஊழியரின் பெயர் பதவி மற்றும் பணிபுரிந்த அலுவலகம்/ பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | திரு.ச.சேரன், இளநிலை உதவியாளர் வட்டாரக் கல்வி அலுவலகம், மாதனூர், திருப்பத்தூர் மாவட்டம். | திரு.கோ.சம்பத், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, கொல்லக்குப்பம், திருப்பத்தூர் மாவட்டம். | 14.10.2022 முற்பகல் | 14.10.2022 முற்பகல் |

நிபந்தனைகள்-

1. இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்தில் தகுதி காண் பருவத்தினை முடிக்க வேண்டும்.
2. ஈராண்டு காலத்தில் தமிழ்நாடு மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
3. தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகள்/ பயிற்சிகளில் குறிப்பிட்டுள்ள கால வரையரைக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
4. தனியர் அளித்துள்ள கல்விச்சான்றுகள் மற்றும் இதர சான்றுகள் உண்மைக்கு புறம்பானவை எனக் கண்டறியப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
5. பணிவரன்முறை தொடர்பான பதிவுகளை தொடர்புடையவர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் பதிவுசெய்யப்பட்ட விபரங்களை உடன் அனுப்பப்படவேண்டும்.

இணைப்பு-

1. தொடர்புடையவரின் பணிப்பதிவேடு I
2. அசல் கல்வி சான்றுகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
திருப்பத்தூர் மாவட்டம்

09/12/24.

பெறுநர்
திரு.ச.சேரன்,
வட்டாரக் கல்வி அலுவலகம்,
மாதனூர்,
திருப்பத்தூர் மாவட்டம்.
} (உரிய வழியாக)

நகல்

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை-600006.
2. வட்டாரக் கல்வி அலுவலர்,
மாதனூர், திருப்பத்தூர் மாவட்டம்.